உ
சிவமயம்

வயாவிளான் வாசரும்
அரசாங்க மரக் கூட்டுத்தாபன
உள்ளகக் கணக்காய்வாளரும் ஆகிய

# திரு. வ. க. நடராசா அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்த

# நினைவு மலர்

## SOUVENIR
**IN MEMORY OF THE LATE**
**MR. V. K. NADARAJAH**

துந்துபி௵ ஆனிமீ

**29-6-1982**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வயாவிளான் வாசரும்

அரசாங்க மரக் கூட்டுத்தாபன

உள்ளகக் கணக்காய்வாளரும் ஆகிய

# திரு. வ. க. நடராசா அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்த

# நினைவு மலர்

துந்துபி௵ ஆனிமீ

1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,



**திரு. வ. க. நடராசா அவர்கள்**

**தோற்றம்: 20-10-1931** **மறைவு: 30-5-1982**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘உள்ளத்து ளெல்லாம் உள்ள’ உத்தமர்

# அமரர் வி. கே. நடராசா

உலகம் ஒரு நாடக அரங்கு. இந்த அரங்கிலே ஆடிக் களைத்து மறைந்தவர்களின் தொகையை இவ்வளவு என்று கூறுதல் இயலாது. எனினும் இவர்களில் ஒரு சிலர்தான் உலக மாந்தர்களின் நெஞ்சங்களிலே என்றும் நிலைத்து நிற்கின்றனர். பூதஉடலின் ஆட்டம் முடிவுற்றது உண்மைதான். ஆனால் இவர்களின் புகழுடம்புகளுக்கு ஓய்வே இல்லை. இத்தகைய மறைந்தும் மறையாதோர் வரிசையில் ஒருவர்தாம் அமரர் வி.கே. நடராசா அவர்கள்.

கல்லடி வேலனின் தாயகமும் கணக்கற்ற அறிஞர்களின் உறைவிடமுமான வயவை நகரிலே அன்னாரின் வமிசத்திலே **20–10–1931**இல் தோன்றினார். இவர் பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளையினதும் சின்னப்பிள்ளையினதும் மகனாவார். இவர் தனது இளமைக் கல்வியை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பயின்றார். இளமையிலேயே இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்றுத்தேறி எழுது வினைஞராகத் தனது வாழ்வைத் தொடங்கினார். இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாளராகக் கடமையாற்றினார். அரசகரும மொழித் திணைக்களகத்தில் சக ஊழியர்களினதும் மேலுத்தியோகத்தர்களினதும் பாராட்டுதலைப் பெற்றுக் கடமையாற்றினார். இவர் தனது உத்தியோகத்தில் படிப்படியாக முன்னேறி இறுதிக்காலத்தில் அரச மரக் கூட்டுத்தாபனத்தில் உதவி உள்ளகக் கணக்காய்வாளராகப் பதவி உயர்வு பெற்று அப்பதவியைக் கண்ணியமாக வகித்து வந்தார்.

ஒருவனை அளந்து மதிப்பீடு செய்வதற்கு அவனது திறமைகள் மட்டுமே கருவிகள் அல்ல. அவன் தனது சூழலோடும் சமூகத்தோடும் ஒட்டி உறவாடி அன்புசெய்தும் அன்பு செய்யப்பட்டும் மறையும்பொழுதுதான் அவனை முழு மனிதனாக, உயர்ந்தோனாக நாம் கணிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

எனவும்,

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோட் பட்டது உடைத்து.

எனவும் வள்ளுவர் வகுத்துரைத்த வகையிலே பண்போடும், நண்போடும் வாழ்ந்து காட்டி உற்ருர், உறவினர், சக ஊழியர், ஊரார் யாவரும் நினைந்து நினைந்து அழுமாறு வைத்து மறைந்தமையே நடராசாவின் நயத்தக்க உயர் பண்பும், உன்னத வாழ்வுமே நாம் நினைவுகூர வேண்டியவை.

"வயவையின் வாழ்வுக்கு வளமளித்தோன், தயவை நாடியோர்க்குத் தன்னலம் பாராது தன் கடமை செய் தோன். உயர்வான நிலையடைந்து ஊர்த்தொண்டு புரிந் தோன்."

"சாக்கே போக்கே சொல்லாத வி. கே. இருக்கின் கின்ருர். விரைந்திடுவோம் கொழும்புக்கு என்றிருந் தோம், இனி வயவையார்க்கே உதவி செய்ய வி. கே. ஐ எங்கு காண்போம்."

"ஒளியாய்த் திகழ்ந்தவனே! இன்று எம்மையெல்லாம் ஏன் இருட்டறையில் விட்டுச் சென்ருய்."

என்பன வி. கே. நடராசாவின் மறைவின்போது ஊரா ரின் கண்ணீர் அஞ்சலியிலே துளைத்தெடுத்த சில முத்துக்கள். இவை நடராசா என்ற மாமனிதனின் ஆளுமையையும் பண்பையும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றன.

நடராசாவை இழந்த அவரின் மனைவியார் செல்வ நாயகி சோடிழந்த அன்றிலாய்த் துடிதுடித்துக் கண்ணீரிலே கதை எழுதுகிருர். மக்களான ஜெயந்தி, சுமதி, உமேஷன் ஆகியோர் உயிர் இழந்த உடல்களாய், கொம்பிழந்த கொடி களாய்ப் புலம்பிய வண்ணம் இருக்கிருர்கள். உறவினரதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகஊழியரினதும், ஊராரினதும் கவலை கரைகாணமுடியாத தாய் இருக்கிறது. காலந்தான் இவர்களுக்கு ஆறுதல் வழங்கல் வேண்டும்.

**காலம் என்ற மரத்தினிலே**
**கனிந்த அன்புக் கனியொன்று**
**கோல மழிக்கும் விதியென்ற**
**கொடிய புயலால் வீழ்ந்ததுவே**
**ஞாலம் போற்றும் நடராசா**
**நல்லோன் மறைந்தான் அழுகின்றோம்**
**ஆலம் உண்ட சிவனாரின்**
**அருளால் வீட்டை அவர்உறுக.**

அமரர் நடராசாவின் ஆன்மா சாந்தி பெற இறைவனின் திருவருளை வேண்டுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**"சொக்கன்"**
விரிவுரையாளர்

அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
பலாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வயாவிளான்

அமரர்

# வ. க. நடராசா அவர்கள்

## வையகம்விட்டு வானுலகம் சென்றதை முன்னிட்டு அன்னாரின் நினைவுகூர்ந்து அன்னாருக்களிக்கும்

# வம்ச வரலாற்றுக் கவி

திதி வெண்பா

சீரார்துந் துபிஆண்டு வைகாசி யீரெட்டில்
பேரார்ஞா யிறுவாரம் நவமியினில் — பார்போற்றும்
எல்லவர்க்கும் நல்லன் இனியகுண நடராசன்
வல்லபரன் பதமடைந்தான் காண்.

### அகவற்பா

நலம்நாடும் நாட்டினர் நாடியே தேடிடும்
நவரத் தினத்தொடு நல்லிள முத்தும்
பவளமும் பல்வகை வைரமும்
திகழ்ந்திடத் துலங்கிடும் நாடு
ஏற்றோர் போற்றும் எழிலார் ஈழநாடு.

இயற்கையின் எழிலும் எய்திய புகழும்
இயைந்திட விருக்கும் இவ்வீழ நாட்டில்
இனிதே இருக்கும் யாழ்த்திரு நகரில்
நல்லவர்; வல்லவர்; நாவில் நர்த்தனம் புரிபவர்;
புன்மை தவிர்ப்பவர்; பொல்லாங்கு போக்குவர்;
பொதுநலம் புரிபவர்; பெருநலம் பேணுவோர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தகை யாளர் ; பேருதவி செய்வோர் ;
கற்றறி வாளர் ; கற்றறி விப்போர் ;
கடமை யாளர் ; கண்ணியம் மிக்கோர் ;
உடமை யாளர் ; மடமை மறந்தோர் ;
செயல்பல செய்து செவ்வையாய் வாழ்வோர்
வாழ்ந்திடும் பதியே வயவையெம் பதியாம்.

மனஇருள் மறைத்து மனஅருள் அளித்து
மனமதுமகிழ மருளதை மறைக்கும் மானம்பராயும்
சினமதுகொண்டோர் செருக்கையடக்கிய சிவனது தலமும்
கற்பைக்காத்த கைகூப்பும் கடவுளாம் கண்ணகை அம்மனும்
ஏங்கும் இதயத்தைத் தாங்கும் தெய்வமாம் ஏழுதலங்களும்
பாங்குடன் பலகலை பயிலும் பள்ளிக்கூடமும்
பலபேர் பயின்றிடும் பயிற்சிக் கூடமும்
பார்ப்போர் வியக்க வானில்பறக்கும் வானூர்தி நிலையமும்
மௌன மருந்தால் மனதை மாற்றும் மௌனசபையும்
வயவை மண்ணின் மாண்பை உணர்த்தும்.

மேலுள்ள மேன்மையை மேதினி மெச்சும்
வண்டமிழ் வாழும் வயவையம் பதியில்
வளமும் பலமும்; நலமும் குலமும் குடிகொண்டிருக்கும்
வல்லிபுரம் வழியால் வரவாய் வந்த
கண்ணியம் சார்ந்த கணபதிப் பிள்ளைக்கும்
அவருக் கினியாள் அன்புக் குரியாள்
சிறப்பின் செல்வி சின்னப் பிள்ளைக்கும்
சீரிய புதல்வன்; சிறப்பி னிருப்பிடம்;
இனியார்க் கினியன் ; எல்லோர்க்கு முரியன் ;
உயரிய உள்ளம் ; உத்தம ஞானேன் ;
உண்மைத் தொண்டன் ; ஊருக் குரியோன் ;
நாடு செழிக்க ; வீடு சிறப்புற :
நம்முர் வாழ ; நமதூர் சிறக்க ;
நடராசா என்ற நல்லதொரு நாமன்
நம்மூரில் உதித்தது நமதூர் வாழ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மூர் சிறக்க நடாவென்னும் நல்லான்
நன்ருய்க் கல்வியைத் தன்னூரில் கற்று
கற்ற கல்வியைக் கைவிட்டுச் செல்லாது
கந்த ரோடையின் ஸ்கந்தா தன்னில்
களிப்புடன் கல்வியைக் கனக்கப் பெற்று
எழுதுநர் பதவியை ஏற்றுப் பெற்று
எல்லோரும் ஏற்ற ஏற்றமாய் வாழ்ந்து
அரச கருமத்தை அழகுற ஆற்றும்
மொழித்திணைக் களத்தில் பதவி முதன்மையாகி
வையம்முழுதும் வாஞெலி மூலம் வாய்மொழி பரப்பி
மக்கள் நாடும் மரத்தை விற்கும் தாபனம்தன்னில்
கண்ணி யத்துடன் கணக்காய்வு செய்து
கற்ருேர் சிறக்க மற்ருேர் மதிக்க
மண்ணின் மீது மதிப்புடன் வாழ்ந்தார்.

சீரும் சிறப்பும் செல்வக்கொழிப்பும் சீராயிருக்கும்
செல்லர் செல்வி செல்வநா யகியைச்
சிறப்புடன் விரும்பி சேர்ந்தனன் ஒன்ருய்
சேர்ந்தபின் சேய்கள் மூன்றிணைப் பெற்றனர்
அவர்களுள் மூத்தவள் ஜெயந்தி ஆவார்
அடுத்தவள் சுமதி என்னும் நங்கை
விஞ்ஞானப் பட்டம் படிப்பவர் ஆவார்
கண்ணிய சீலன் நடராசா போல்
காணும் பொழுது காட்சி தருவோன்
கடைசி மகனே உமேஷன் ஆவான்.

இவருக்கு மூத்தோன் முத்தையா ஆவோன்
பெருமைக்குரிய பெற்ருேலியத்தில் பெரும்பணி புரிவோன்
சிறப்புறு பெண்ணும் செல்லம் மாவும்
சீராய்ச் சிறக்கும் செல்வரத் தினமும்
நானிலம் போற்றும் நடாவின் தங்கையராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந் தெருக்களில் பெருந்தொழில் பொருந்திய
பொறியிய லாளர் தம்பிராசா என்றவர் தம்பி
குணத்தில் குன்றும் குமரை யாவும்
இனியார்க் கினியன் இராசை யாவும்
தகைமையேற்று கடமை செய்யும் தம்பிஐயாவும்
தூரவுள்ள ஜேர்மனிதன்னில் தொழில்புரியும் துரைஐயாவும்
தன்னலம் கருதா தரும ராசா
யோகராசா இரத்தினராசா என்போர் அனைவரும்
ஏந்தல் நடாவின் இளைய தம்பிகள்.

சுறுதியாய் திகழும் சுப்பை யாவும்
தீரம் திகழும் தியாகராசா தன்னும்
ஆருயிர் அன்பன் அப்புத் துரையும்
சமூகத் தொண்டன் நடாவினது
சமூகம் மதிக்கும் சகலர் ஆவார்.
எழுதுநர் பதவியில் ஏற்றம் புரிந்து
மதிப்புட னிருக்கும் மகரா சாவும்
பறக்கும் தளத்தில் பதவிவகிக்கும் பரராஜசிங்கமும்
அறிவை அருளும் ஆசானுன அருட்பிரகாசமும்
அன்புக் குரிய மைத்துனர் ஆவார்.
பொன்போல் மனத்தாள் பொன்னம் மாவும்
இனியார்க் கினியாள் இராசம் மாவும்
முழுமதி முகத்தாள் முத்தாச் சியும்
தண்ணளி மிக்க தங்கச்சிப் பிள்ளையும்
தங்கக் குணத்தோன் நடரா சாவின்
தன்னலம் கருதா மைத்துனி ஆவார்.
இரப்போர் போற்றும் இராச யோகம்
கனிவாய் கமழும் கமல நாயகி
கண்ணிய சீலரின் மைத்துனர் தன்னை
கைபிடித்து மணந்தவ ராவர்.

சிலிர்ந்தெழும் சிங்கம் சிவ குமாரும்
ஜெயமாய் வாழும் ஜெய குமாரும்
நல்லவை நாடும் நந்த குமாரும்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசிதரன், சசிரூபன் என்போர் தானும்
சத்திய சீலர் டினேசும் டிஷானும்
மங்கை நல்லாள் மகாசக்தி யோடு
சசிகலா பிரவீணு என்போர் தானும்
அன்புக் குரிய மருமக்கள் ஆவார்.

வளமார் ராஜன் வரத ராஜன்
ஜெகத்தை ஜெயிக்கும் ஜெகதீசன் தன்னும்
சீருடன் சிறக்கும் சிறீ தரனும்
சிங்கை தன்னில் சீராயிருக்கும் பகீரதன் தானும்
சிரித்த முகத்தான் சிறிகாந் தனும்
தங்கக் குணத்தான் தயாளன் தன்னும்
ஜெயமாய் இருக்கும் ஜெயதாசன் என்போன்
அயலார்க் குதவும் அகிலன் தானும்
வனப்பு மிக்க வரத ராணியும்
ஜெகத்தினில் வாழும் ஜெய ராணியும்
விரும்பும் பெண்ணுள் விமலா தேவியும்
அருந்ததி யான அருந்ததி தேவியும்
இன்னல் தீர்த்த இந்திரா தேவியும்
அடுத்த மகளாம் ரதி தேவியும்
இனிமையாய் இருக்கும் இராசேஸ் வரியும்
ரதியின் ரகமாம் ரஜனி தானும்
திருவாய் திகழும் திருமகள் தானும்
கனிவாய் கமழும் கலைமகள் தானும்
மனமது சிறந்த மஞ்சுளா மகளும்
பெருமையைப் பேணும் பெருமக்கள் ஆவார்.

இத்தனை சிறப்பும் இருக்கப் பெற்று
இயமனின் இலக்கு இதனால் பெற்று
இதயத் தாக்கம் இருந்ததைக் கொண்டு
ஏந்தல் நடாவும் இறந்தார் அன்றோ!

ஆக்கம்: க. ஸ்ரீதரன், B. A.
சட்ட மாணவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவபதம் எய்திய

## திரு. வ. க. நடராசா அவர்களின்

# குடும்ப பிரலாபம்

(உள்ளூர்ப் புலவரொருவர் இயற்றியவை)

### நேரிசை வெண்பா

#### நாயகி புலம்பல்

நட்டாற்றில் என்னையும் நான்பெற்ற மக்களையும்
கட்டமுற விட்டிந்தக் காசினியில் — இட்டமுற்று
அன்பாய் அழைக்கின்முன் கூத்தனென நீர்செல்லின்
என்னென்று வாழ்வேன் இனி.

காதல் இருவர் கருத்து ஒருமித்து
ஆதரவு பட்டதே என்றெளவை — ஓதியதைத்
தாரில் விளக்கியநீர் என்சம் மதமின்றிப்
பூரணன்பாற் போதல் பிழை.

#### புதல்விகள் புலம்பல்

அன்பே சிவமென்னும் அப்பாவே! நின்னைப்போல்
அன்புருவாய் ஈசனையும் எண்ணியே — அன்பார
வந்தித்து வந்தோம்நாம் நின்னுயிரைக் காவாரைச்
சிந்திக் கிலமங்ஙன் இன்று.

அப்பாவே எங்களது ஆருயிரே! என்னகுறை
இப்போது செய்தோம்நீர் ஏகுதற்கு! — இப்பாரில்
வைத்தியைகள் ஆக்கிவைப்பேன் என்றுசொன்னீர்; எம்மையினி
வைத்தியைகள் ஆக்கிவைப்பார் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏகபுத்திரன் புலம்பல்

இயன்றமட்டும் கற்ளுெளிர்க! இவ்வுலகில் உன்னை
இயன்றமட்டும் ஏற்றிவைப்பேன் என்றீர் — அயர்ந்ததனைச்
சொக்கன்பாற் சென்றுள்ளீர்; சொல்லிக் குடும்பநிலை
தக்கவருள் செய்விமினெங் கட்கு.

என்னவித பாடுபட்டும் இங்கிலாந்து யான்சென்று
நன்குகற்று எஞ்சினியர் ஆகுவேன் — பன்னுதிட
சித்தம் திருவருள் என்பவுண்டேல் தன்னுரைச்
சித்தியுண்டாம் என்னுநின்சொற் கேட்டு.

### உடன்பிறந்தோர் புலம்பல்

சோதரனே! நின்னைப்போற் சொல்லரிய சோதரனைப்
பூதலத்திற் காண முடியாது — ஆதரவாய்
எம்மை வரவேற்பீர் ஏற்ற உதவிசெய்வீர்
இம்மைப் பயனுகி ஈங்கு.

### சட்டச் சகோதரங்கள் புலம்பல்

நஞ்சுக துக்கத்தை நின்சுக துக்கம்போல்
நெஞ்சினிலே நன்கு நினைத்துமே — எஞ்ஞான்றும்
எங்கள் சுபாசுப வேளையினில் ஒக்கலிப்பீர்
இங்கிதமாய் வந்தெங்க ளோடு.

### பெருமக்கள், மருமக்கள் புலம்பல்

மக்களைப்போல் எங்களையும் மாநிலத்தி லேயெண்ணி
எக்காலும் எங்களை ஆதரிப்போய்! — மக்களிடை
வேற்றுமைக்குள் ஒற்றுமை காணுநின்றன் பண்பாடு
போற்றரிது! போற்றரிது!! காண்.

### சுற்றத்தாரும் மற்றும் ஊர்மக்களும்

சுற்றம் தழுவல் சுகதுக்கம் பங்கிடுதல்
பற்றற்ற போதுமினம் பாராட்டல் — மற்றுமில்லார்
அல்லல் களைதல் அனைவர்க்கும் ஆவசெய்தல்
நல்லநட ராசனது சால்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட நூலறிஞர்

**திரு. வ. இராசநாயகம் அவர்கள்** பாடியன

**என்சீர் ஆசிரிய விருத்தம்**

நல்லோர்கள் நடுவயதில் மறையும் வேளை
நானிலம் முழுவதுமே கவலும் என்று
கல்லாரும் கற்ருேரும் கழறு வார்கள்;
காசினியில் இதனுண்மை இன்றே ஓர்ந்தேன்;
நல்லோருள் நல்லவனுய்த் திகழ்நம் தொண்டன்
நடராசன் நமைவிட்டுப் பிரிந்தே கின்ருன்
பொல்லாத இயமனேயிப் புவியோர் எல்லாம்
பொடிப்பொடியாய்ப் போகவெனச் சபிக்க விட்டே!

தேற்றம்

நேரிசை வெண்பா

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத் திவ்வுலகென் பாவின் — பொருளுணர்ந்து
தேறிமனம் செல்சீமான் ஆன்மசாந்தி எய்தவெனக்
கூறுவாம் ஆன்மார்த்த வாழ்த்து.

ஜீவஹம்சா மீண்டும் பரமஹம்சா தன்னைப்போய்
மேவுதலே முத்தியென்னும் வேதாந்தம் — தேவாம்சம்
வாய்ந்த நடராஜன் மாதேவன் பாதமுறல்
ஆய்ந்தறிவோர் எய்தார் துயர்.

---

## அநித்தியத்தை விட்டு நித்தியத்தை நாடுமின்!

வாதுற்ற திண்புய அண்ணு மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சே! இந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென்? தேடிப் புதைத்த திரவியமென்?
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே!

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணுதல் கண்டுமிப் பாரினிலே
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவன்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

— பட்டினத்தடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ. க. நடராசா அவர்களுக்கு எமது அஞ்சலி

மறைந்தும் மறவாமல் கடந்த 12 ஆண்டுகள் எங்கள் மத்தியிலும், கூட்டுத்தாபன ஊழியர் மத்தியிலும் இணை பிரியாத ஊழியனாக, அன்பனாக, நண்பனாக வாழ்ந்த திரு. வ. க. நடராசா அவர்கள் எதிர்பாராத விதமாக மேமாதம் 30ஆம் நாள் ஞாயிறு தினத்தில் மார்படைப்பால் எங்களை விட்டுப் பிரிந்த செய்தியைத் தொலைபேசியில் கேட்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தோம்.

1969ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரசாங்க சேவை இலாகாவில் இருந்து விலகி எமது அரசாங்க மரக் கூட்டுத் தாபனத்தில் பிரதம எழுது வினைஞராகப் பதவி ஏற்றார். இவர் தனது திறமையினால் கடமைகளை நிரைப்படுத்திக் கடமை உணர்ச்சியுடனும், கண்ணியமாகவும், கட்டுப்பாடாக வும் செயல்புரிந்தார். இவருடைய நேர்மையான குணத்தினா லும் திறமையுடைய செயல்வீரனாக இருந்தபடியாலும் கூட்டுத் தாபான இயக்குனர்கள் சபை கடன்வசூலிக்கும் உத்தி யோகத்தர் என்ற பதவியை இவரிடம் ஒப்படைத்தார்கள். இப்பதவியைச் சரிவரச் செய்து தனது திறமையைக் காட்டிய காரணத்தால் சில ஆண்டுகளின் பின் உதவி உள்ளகக் கணக் காய்வாளராகப் பதவி உயர்வு பெற்று, உயர் உத்தியோ கத்தர் வரிசையில் வைக்கப்பட்டார்.

மறைந்த நடராசா அவர்களை அவருடைய சகநண்பர்கள் "நடா" என்று அழைத்துக் கொள்வார்கள். அவர் எப்பொழு தும், எந்நேரத்திலும், எவருக்கும் உதவி செய்யத் தயாராக இருப்பார். இது இவருடைய நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது. இவர் எல்லாச் சிற்றூழியர்களுடனும் தன் சக ஊழியர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் பேசுவார். இது ஒவ்வொரு ஊழியர் நினைவிலும் அவர்கள் முன் நிற்பதுபோல் காட்சியளிக்கிறது. எமது கூட்டுத்தாபனத்தில் அவரை அறி யாத ஊழியர்களோ அவரின் உதவி பெறாத சிற்றூழியர் களோ இல்லை என்றே கூறவேண்டும். எவராயினும் எவ்வெப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எவ்வகையான உதவியைக் கேட்டாலும் அவ்வப் போது தன்னால் முடியுமானவரை செய்து கொடுப்பார், இப் படிப்பட்ட ஒரு நல்ல நண்பனை இழந்து விட்டோம் என்று நினைக்கும்போது மிகவும் கவலையாக இருக்கிறது.

அவரின் பிரிவை நினைத்து ஆறாத்துயரத்தில் வாடும் அவரது பாரியாருக்கும் பிள்ளைகளுக்கும் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தி அடைய இறை வனைப் பிரார்த்திக்கிறேன்.

சு. குமாரசிங்கம்
746, காலி வீதி — வினியோக முகாமையாளர்.
கொழும்பு - 4 — அரசாங்க, மரக்கூட்டுத்தாபனம்

---

நண்பர், அன்பர்

# V. K. நடராசா அவர்களுடன் பல ஆண்டுகள்

பல ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்து 1952இல் அரசகருமமொழிப் பகுதியில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணி புரியக் கொழும்பு மாநகரஞ் சென்றேன்.

1952 இல் உருவாக்கப்பட்ட அரசகரும மொழிப் பகுதி யில் நண்பர் திரு. V. K. நடராஜா அவர்களும் எழுதுவினை ஞராகக் கடமையாற்ற முதன்முதலாகச் சேர்ந்தனர்.

இருவரும் நண்பரானோம். ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு நட்பும் அன்பும் மலரப் பணிபுரிந்தோம். அன்பர் திரு. V. K. நடராஜா அவர்கள் பழகப் பண்பு வாய்ந்தவர்; சமயப் பற்றுப் பொருந்தியவர்; விரதங்கள் பல அனுட்டிப்பவர்; நற்குண நற்செய்கையுடையவர்; மனதிற் கபடமோ வஞ்சகமோ இல்லாதவர்; எல்லா விடயங்களையும் நேரிற் கதைத்து நேர்மையுடன் தீர்த்துவைக்கும் சிறப்பாற் றல் மிக்கவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக வல்லவர் ; பாடியாடவும் வல்லவர்; தேடி நன்மை செய்யும் பழக்கமுடையவர்; மேலதிகாரிகளின் நன்மதிப்பை யும் பெற்றவர்.

சிரித்த முகத்தினர் ; சீரிய பழக்கம் மிக்கவர். நாகரிக மாகப் பழகும் குணம் அவரிடத்தில் விஞ்சி நிற்கும்.

அரசகருமமொழிப் பகுதியிற் கடமையாற்றும்போதே திரு மணமுஞ் செய்தனர். திருமணத்திற் கலந்துகொள்ளும் வாய்ப் பும் எனக்குக் கிடைத்தது. இல்லறவாழ்க்கையை நடாத்திப் பிள்ளைகளைப் பெற்று இன்புறும் வேளைகளிலும் நாங்கள் கலந்துகொண்டோம்.

உத்தியோக உயர்வு நோக்கி இலங்கை மரக்கூட்டுத் தாபனத்திற் கடமை புரிவதற்குச் சென்றனர் எனினும் எங்கள் நட்புரிமை அன்புரிமை மேலும் மேலும் வளரலாயிற்று. இடைசுகம் நாங்கள் சந்தித்து அளவளாவி உல்லாசமாகக் காலங் கழித்தும் வந்துள்ளோம்.

எங்கள் நட்புரிமைக்குப் பங்கம் ஏற்பட்டதே கிடை யாது. நான் இளைப்பாறிய பின்னரும் மட்டக்களப்பிற்கு வரும்போதெல்லாம் என்னைச் சந்திக்க வீடு தேடி வருவார். மூன்று மாதங்களுக்கு முன்னர்கூட என் இல்லத்திற்கு வந் தார். எங்கள் பழைய நினைவுகளையெல்லாம் பேசிப் பேசி இன்புற்றோம்.

நடந்தேறிய இந்து மகாநாட்டிற்கு நான் கொழும்பு சென்றபோது அலைந்து திரிந்து தேடிப்பிடித்து தமது இல் லத்தில் மதிய உணவு தந்து மகிழ்ச்சியடைந்தார்.

பழமை வாய்ந்த பண்புள்ள நண்பரை நாள்கள் தோறும் மகிழ்ந்து உரையாடிய அன்பரை நாம் இழந்து வருந்துகின் றோம்.

வருந்தி என் செய்வது! நண்பரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**வித்துவான் F. X. C. நடராசா**
ஓய்வுபெற்ற அரசகருமமொழித்
திணைக்கள உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நினைவில் நீங்காத ஒருவர்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளின் தோற்றமே உயர்திரு. வி. கே. நடராஜா அவர்கள். அரச கருமமொழித் திணைக்களத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகக் கடமையாற்றி எல்லோரது உள்ளத்திலும் நீங்காத இடத்தைப் பெற்றுக்கொண்ட பெருமை உடையவர் திரு. நடராஜா அவர்களே.

வாலிபராக, அழகும், இளமையும் நீங்காத புன்னகையும் யாவருக்கும் உதவி செய்யும் மனேபாவமும் உடைய திரு. நடராஜா அவர்களது சேவை மூலவேராக அமைந்து அரசகரும மொழித் திணைக்களத்தை இயங்கவைத்தது.

அரசகரும மொழித் திணைக்களம் தம்மொழி ஆணைக் குழுவிலிருந்து தனியாகப் பிரிந்து றீட் மாவத்தையில் இயங்கத் தொடங்கியபோது நிதிப் பிரிவுப் பொறுப்புத்தியோகத்தராகப் பதவி ஏற்ற திரு. நடராஜா அவர்கள் திரு. நந்தா விஜயசேகரா, திரு. பீட்டர் பி. அபயசேகரா ஆகிய இரு ஆணையாளர்களுக்குக் கீழும் தமது கடமையைச் சரிவரச் செய்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். 'உயிரோ டோடிய நட்புச் சிறிது பொருளோ டோடக் கெடும்' என்பது வள்ளுவர் வாக்கு. திரு. நடராசா அவர்களது சேவை வள்ளுவர் வாக்கினை மறுதலிக்கும் வகையில் அமைந்துவிட்டது எனலாம்.

ஆணையாளர் முதல் சிற்றூழியர்வரை யாருமே மனம் நோகாத வண்ணம் அனைவரது உள்ளத்திலும் நீங்காத நினைவை நிலைநாட்டி என்றும் இன்முகத்துடன் பழகிய ஒருவராக திரு. நடராஜா அவர்கள் விளங்கினர்.

திரு. நடராஜா அவர்கள் கணிதக்கலை கற்று திணைக்களக் கணக்காளர் சோதனையிலும் திறமையாகச் சித்திபெற்று எமது திணைக்களத்திலிருந்து மாற்றம்பெற்று அரச மரக் கூட்டுத்தாபனத்தில் உயர்ந்த சம்பளத்துடன் கணக்காய்வாளராக உயர்பதவி பெற்றுர். பதவி உயர்ந்து, பணம் பெருகி வாழ்க்கைத்தரம் உயர்வானபோதும், திரு. நடராஜா அவர்கள் பழமைபோல் எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகும் இயல்புடையவராகவே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்விகள் இருவரும் கல்வித்தகைமைகளிற் சிறப்புற்று விளங்குவதனுல் மிகுந்த மகிழ்ச்சியுடையவரானுர்.

செல்வி ஜெயந்தி அவர்களது திருமணச்சிறப்புக் கண்டு களிக்க எண்ணியிருந்தபோது எமக்கெல்லாம் எதிர்பாராத பேரிடியாக, திரு. நடராஜா அவர்கள் காலனது முரட்டுப் பிடியிற் சிக்கிக் காத்திராப் பிரகாரமாக அகால தேகவியோக மானுர். இச்செய்தி கேட்டோர் அனைவரும் துடிதுடித்தனர். எண்ணும் போதெல்லாம் ஏக்கமே குடிகொள்ளும் வகையில் இளம் வயதிலேயே இவ்வுலக வாழ்வை நீத்துப் பேரா வியற்கை எய்திஞர் திரு. வி. கே. நடராஜா அவர்கள்.

திருமதி செல்வநாயகி நடராஜா அவர்களுக்கும், அருந் தவப் புதல்வியர், அருமந்த புத்திரன், உற்ருர், உறவின ருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது.

நண்பர்களாகப் பழகிய எம்மாலேயே திரு. நடராஜா அவர்களது மறைவு தாங்கொணுத் துயர் தருவதாயமைந்து விட்டது எனின், ஒன்ருய் உடனுய் என்றும் பழகிய மனைவி, மக்களது துயர் எல்லாம்வல்ல இறைவனது திருவருளாலே தாங்கக் கூடியதாயமையவேண்டும் எனப் பிரார்த்திப்பதே எம்மாற் செய்யக்கூடியதாகும்.

திரு. நடராஜா அவர்களுடன் ஒருமுறை பழகியவரும் அவரை மறக்கமாட்டாதவராகி விடுவார் என்பது அனுபவ வாக்கு. ஆனல் உலகத்தில் ஒரு நியதி உண்டு. நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்பதுதான் அது.

எவருக்கும் எக்காலத்தும் மனதாலும் தீங்கு நினையாத இயல்புடைய திரு. நடராஜா அவர்களது ஆத்மா இறையடி நிழலில் என்றும் பேரானந்தப் பெருவாழ்வில் திளைத்திருக்க வேண்டும் என்று அனைவரும் பிரார்த்திப்பதன் மூலம் அன்பு மனைவியும் அருமை மக்களும் மன ஆறுதல் பெறுவார்களாக.

கு. குருசுவாமி
அரசகருமமொழித் திணைக்களம்,
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளுவன் வகுத்த வாழ்க்கை நெறியில் வாழ்ந்தவர் வ. க.

எல்லோருக்கும் நல்லவர், எல்லோருக்கும் இனியவர், இன்னுச் சொல்லை அறியாதவர், தம்மால் இயன்ற உதவிகளை எவருக்கும் எவ்வித மறுப்புமின்றி மகிழ்ச்சியோடு செய்து வந்தவர். நற்பணிகள் எங்கு நடந்தாலும் அதில் தாமாகவே வந்து கலந்து தம்மால் இயன்ற பணிகளைப் புரியும் பண்பினர். ஏழை, செல்வந்தர், கற்றோர் - பாவலர், முதியோர், வாலிபர், சிறுர், ஆண், பெண் என்று எவ்வித பாகுபாடுமின்றி எல்லோருடனும் அன்பு ஆதரவுடன் பழகி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைக் காலந்தோறும் புரிந்துவந்த புனிதர், **வள்ளுவன் வகுத்த வாழ்க்கை நெறியில் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்டவர்தான் வயவையூர் பெற்றெடுத்த தவப் புதல்வன் வி. க. நடராசா அவர்கள்.** உள்ளத்தாற் பொய்யாது ஒழுகி உலகத்தவர் உள்ளத்தில் எல்லாம் நிறைந்து நிற்பவர்.

அயராத உழைப்பும், விவேகமும், அறிவும் ஆற்றலும் மிக்கவர். இவ்வரிய பண்புகளைத் தமது முன்னேற்றத்துக்கு மட்டுமன்றி ஏனையவர்களின் முன்னேற்றத்துக்கும் கிராம சமூக இன முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தியவர். தீர்க்க முடியாத சிக்கல்கள் நிறைந்த பல பிரச்சினைகளில் தலையிட்டு தமது இன்சொல், சாதுரியம், புனிதமான சிந்தை இவற்றின் உதவிகொண்டு தீர்த்துவைத்த பெருமைக்குரியவர். வயாவிளான் மக்களின் ஒரு பிரதிநிதிபோல் கொழும்பிலிருந்து எம்மவர்களது தேவைகளைத் தமது தேவையென நினைந்து நிறைவேற்றிவந்தவர். தேவைகளை நிறைவு செய்யக் கொழும்பு சென்றோருக்கும் தம்மால் இயன்ற பணிகளைப் புரிந்தவர். எமது கிராம அபிவிருத்திச் சபை ஆரம்பித்த பல்வேறு பணிகளில் நிதியாலும், நல்லாலோசனைகளாலும், செயலாலும் உதவிவந்த உத்தமர். அவரைப்பற்றி என் இதயத்தில் எழும் உணர்வுகளை எழுத்தில் வடிக்கும் ஆற்றல் என்னிடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை மனைவி மக்களையும் பாசம் மிக்க சுற்றத்தாரையும் அன்புநிறை நண்பர்களையும் பரிவுமிக்க ஊராரையும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அமரத்துமடைந்து விட்டார் எமது அருமை நண்பர் வ. க. அவர்கள். அவரின் இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாதது. கவலை காலத்தால் அழிக்க முடியாதது. அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

" உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன் "

**வை. சி. சிவஞானம்**
தலைவர்
வயாவிளான், பலாலி தெற்கு
கிராம அபிவிருத்திச்சபை
கிராமோதய சபை (வயாவிளான்)

---

# வயாவை ஜோதி மறைந்துவிட்டது

சேவையே சீரிய வாழ்க்கையின் சிகரம் என்ற கோட்பாட்டுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் அமரர் வ. க. நடராஜா அவர்கள். அவர் ஓர் சிறந்த சமூகசேவையாளர், தமிழ் மொழிப் பற்று மிக்கவர், விடுதலை வேட்கை கொண்டவர், சமய வாழ்வுக்கு முக்கியத்துவம் அளித்தவர், பழம்பெருமை மிக்க வயாவிளான் — மானம்பராய்ப் பிள்ளையாரின் மேல் ஆராத அன்பு வேட்கை கொண்டவர்.

1965ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட வயாவிளான்— மானம்பராய்ப் பிள்ளையார் ஆலய திருப்பணிச் சபையின் இயங்கும் உறுப்பினராகச் செயல் புரிந்தவர். அத்துடன் வெளியூர் நிருவாகசபைத் தலைவராகவும் கடமையாற்றியவர். அவர் தமது கடமையைக் கண்ணெனமதித்து, திருப்பணிச்சபையினரால் வழங்கப்பட்ட கடமைகளைத் திறம்பட நிறைவேற்றி வெளியூர்களில் தொழில் புரியும் எமதூர் அன்பர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரய்ப் பிள்ளையார் ஆலய திருப்பணிகள் சிறப்புற அமைவதற்கு அயராது உழைத்த பெருமகன். இவ்வாலயம் ஆகம விதிப்படி அமையவேண்டும் — நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்குறவும் சிறப்பாகவும் நிகழவேண்டும் என்பதற்காக ஆலய பரிபாலன சபையொன்று உருவாக்கப் படுவதற்கு முன்நின்று உழைத்தவர். இச்சபையே ஆலயத்தின் அசைவுள்ள அசைவற்ற சொத்துக்கள் அனைத்தையும் நிருவகிக்கவேண்டுமென்று ஆரம்பகாலம் தொட்டு தனது இக்கருத்தினைப் பல சர்ந்தர்ப்பங்களில் ஆணித் தரமாக உரைத்து வந்தவர். மானம்பராய்ப் பிள்ளையாரின் இரதோற்சவ சிறப்புக்களை இலங்கை வானொலி மூலம் அஞ்சல் செய்து — ஒலிபரப்பச் செய்தவர்.

கருத்து வேறுபாடு உள்ளவர்களையும் அணுகி அன்பு, கண்ணியம், மற்றுரையும் மதிக்கும் பண்பு, தர்க்கரீதியாக விடயங்களை ஆராயும் தன்மை, நயம்பட உரைக்கும் நாவன்மை என்பவற்றால் அவர்களை உண்மையை உணரவைக்கும் திறன் வாய்ந்தவர். எமது கிராமத்தாரிடையே ஏற்படுகின்ற பல பிணக்குகளை நேர்மையுடன் சமாதான முறையில் தீர்த்து வைத்த பெருமைக்குரியவர்.

தம்மிடம் உதவி கோரி வருபவர்களை இனிமையுடன் வரவேற்று அன்னவர்க்கு வேண்டிய உதவிகளையெல்லாம் புரிந்தார். இங்குள்ளோரின் கொழும்பில் செய்யப்பட வேண்டிய பல காரியங்களை, அவர்களுக்குச் சிரமமும் பணச் செலவும் ஏற்படாதவாறு தாமே முடித்துக் கொடுத்தார். இங்கிருந்து கொழும்பு செல்வோரையும் அன்புடன் வரவேற்று, அவர்களுடைய கருமங்களை நிறைவேற்றுவதற்காக பலவகைப் பட்ட கஷ்டங்களை ஏற்றும் அவர்கள் கருமங்களைத் திறம்பட முடித்துக் கொடுத்தார். தன்னிடம் உதவி கோரி வருபவர்களின் கருமங்களைத் தன்னால் நிறைவேற்ற முடியுமாயின் உடனே நிறைவேற்றிக் கொடுத்து விடுவார். தம்மால் முடியாத கருமங்களாயின் நண்பர்களின் உதவி பெற்று முடித்துக் கொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்ற முறையில் கொழும்பில் பழைய மாணவர் சங்கக் கிளையை அமைத்து மத்திய மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். எமதூர் ஆரம்ப பாடசாலையாகிய ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலையைச் சீரமைத்து அதன் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டுமென்பதில் பேரவாக் கொண்டிருந்தார்.

எதிர்பாராத வகையில் அமரத்துவம் அடைந்து எல்லா இதயங்களையும் கலங்க வைத்த அவரின் இழப்பு அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல, உறவினருக்கு மட்டுமல்ல, எமதூருக்கே பேரிழப்பாகும். எமது மானம்பராய்ப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். வயவையின் ஜோதி அமரர் வ. க. நடராஜா அவர்களின் ஆத்மா மானம்பாராய்ப் பிள்ளையாரின் திருவடிக் கமலங்களைச் சென்றடைந்து சாந்தி பெற — பிள்ளையாரின் திருவருளை வேண்டி நிற்போமாக.

| | | |
|---|---|---|
| **ந. நாகராசா,** | **சி. சுப்பிரமணியம்,** | **க. சிவபாதம்** |
| தலைவர், | செயலாளர். | பொருளாளர். |

வயாவிளான் — மானம் பராய்ப்
பிள்ளையார் ஆலய பரிபாலனசபை, வயாவிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை

# இரங்கலுரை

மானிடப் பிறப்போ மிக மிக அரிது. இப்பிறப்பில் நம்மவர் பலர் எப்படியோ வாழ்ந்து மடிகிறார்கள். மற்றை யோரை ஏற்றிப் பிழைத்தும் வாழ்கின்றார் சிலர். ஏய்த்துப் பிழைத்து வாழ்பவர் மறுசிலர். ஆனால் எமது நண்பன் வி. கே. நடராசா அவர்களோ ''எப்படியும் வாழலாம்'' என்ற நிலையை வெறுத்து ''எமது வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டும்'' என்ற ஒரு இலட்சியத்தோடு வாழ்ந்தார். அவரது வாழ்க்கை புனிதமானது — போற்றத்தக்கது.

காலஞ்சென்ற திரு. நடராசா அவர்களின் இல்லத்திலே எமது பழைய மாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்ற பொழுது அன்னார் எமக்குரைத்த நல்வாக்கு — நல்லாசி — நனவாகுமுன்னரே அவர் எம்மைவிட்டு மறைந்து விட்டார். என்னே காலனின் கூத்து. வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியில் சிறப்புமிகு — செழிப்புமிகு — மாணவனாக விளங்கிய திரு. நடராசா அவர்கள் எமக்கெல்லாம் ஓர் நல்லாதர்சம்.

அன்று ஓலைக்குடிசையாக — ஓங்கிவீசும் சோளகக் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் இருந்த எம் கல்லூரி இன்று கவினுறு கட்டடங்களோடு — கண்கொள்ளாக் காட்சியுடன் விளங்குவதற்குப் பங்காளிகளாக இருந்தவர்களுள் திரு. நடராசாவும் ஒருவர்.

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்குத் தமது கடமையும் செலுத்த வேண்டுமேயென்று சென்ற வேளையில் தான் அவர் முதலில் இருதய தாக்கத்திற் குள்ளானார். பழைய மாணவர்களாகிய நாம் இதை மறக்கமுடியுமா? எமக்கெல்லாம் நல்லாசானாக — நல் வழிகாட்டியாக இருந்து காலன் கைப்பட்ட எங்கள் ஆருயிர் நண்பனுக்கு — ஒரு சிறந்த பண்பாளனுக்கு — எமது கண்ணீரோடு கலந்த அஞ்சலிகள் பல.

இ. கதிரவேலு
செயலாளர்
(வயாவிளான், அரசினர் மத்திய கல்லூரிப்
பழைய மாணவர் சங்கத்தின் சார்பில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயாவிளான் — பலாலி தெற்கு
# தருமப் பணியின் இரங்கலுரை

ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பபால் இருந்து அரும்பாடுபட்டுத் தேடிய செல்வத்தை, தம் ஊர் ஏழை—எளிய மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமெனத் தம் இனப் பற்று வைத்து தருமப்பணி உருவில் தம் பிறப்பிடமான வயாவிளானில் செலவிட்டுக்கொண்டிருக்கிருர்கள் திருவாளர் கள் தம்பையா கந்தையா, தம்பையா செல்லப்பா என்னும் இரு பெரியார்கள்.

பணம் இருந்தால் மட்டும் போதுமா? இப்பணத்தை நல்வழியில் செலவிட எமக்கு அறிவுரை பகன்ருேரில், அண் மையில் இறைவனடி எய்திய திரு. க. நடராசா அவர்களும் ஒருவராவர்.

தாம் பிறந்த ஊரான வயவை நகருக்கு, ஏழை—எளிய வர்—பணக்காரர்,— உயர்ந்தவர்—தாழ்ந்தவர் என்ற பேதங் களைப் பாராட்டாது, அநேக குடும்பங்களின் நலனுக்காக பல சேவைகள் செய்த இந்த நல்லவர், வல்லவராக வாழ்ந்த போதும், தம் இறுதிக் காலத்திலும்கூட, மக்கள் பணியே தம் பணியாக ஏற்று, எம்மக்களுக்கெல்லாம் ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

பரந்த நோக்கோடு, இயங்கிவரும் எமது தருமப்பணிச் சபையின் நற்றூண்களாக விளங்கியவர்களுள், அமரர் திரு. க. நடரசாவும் ஒருவர் எனக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தருமப் பணிச் சபையுடன் மாத்திரம் அன்னுரது பணி நின்று விடவில்லை. வயவையில் எத்தனையோ சங்கங்களில் முக்கிய உறுப்பினராக இருந்து கல்வி, சமூக, சமய சேவைகள் பல ஆற்றியவர்.

பிறப்பவர் என்ருே ஒருநாள் இறப்பது நியதி. ஆனுல் இறந்தும் இறவாதவர்போல இன்னும் எம்கண்முன் நிலைத்து நிற்கும் திரு. க.நடராசா அவர்களது எதிர்பாராத மறைவை ஒட்டி எமது அஞ்சலியை எழுத்துருவில் தெரிவிக்கும் நாம், அவர் எமக்குக் காட்டிய நற்பணியைத் தொடர்ந்தும் நாடி அன்னுரது இலட்சியப் பாதையைப் பூர்த்தி செய்வோமாக.

வைத்திய கலாநிதி — இ. கனகலிங்கம்
செயலாளர்
ஸ்ரீசின்னத்தம்பி தம்பையா தருமப்பணிச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. V. K. நடராசா அவர்களுக்கு நண்பன் செலுத்தும் அஞ்சலி

திரு. V. K. நடராசா அவர்கள் வயாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வயாவிளானில் தன் பாலியக் கல்வியைக் கற்ற நண்பன் தன் உயர் கல்வியைத் தொடர்வதற்காக சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் சேர்ந்தார். நானும் அவரும் ஒரு வகுப்பு மாணவராயிருந்த காலத்திற்ருன் அவரது உயர்ந்த மனிதத் தன்மையை, இல்லை தெய்வத்தன்மையை உணர்ந்து கொண்டேன். அனைத்து மாணவரிடத்தும் நண்புடன் இயைந்து நடந்து வந்த இவர் எனது உயிரனைய நண்பரானுர். இருவரும் இணைபிரியா நண்பரானேம். என்னையும் சகல வழிகளிலும் உயர்த்தியவர் இவர் என்று கூறின் அது மிகையாகாது. பள்ளிவாழ்க்கையில், பல்வகை விளையாட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்கி மாணவதலைவனுகவும் கடமையாற்றிக் கல்லூரியின் உயர்ச்சிக்காக அயராது உழைத்த இப்பெருமகன் அதிபர், ஆசிரியர், மாணவர் யாவர் உள்ளத்திலும் நிலை பெற்றுள்ளார். எச்சமயத்திலும் இன்சொல் வழங்கும் இவர் மாணவர்க்கும் யாவருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாயிருந்தமை என்னுள்ளத்தை விட்டு நீங்காது.

அரசகருமமொழித் திணைக்கள உத்தியோகத்தராயிருந்த இவர் சுயமுயற்சியினுல் கணக்காய்வாளரானுர். அதன்பின் நான் கடமையாற்றும் மரக்கூட்டுத்தாபனத்தில் உதவி உள்ளகக் கணக்காய்வாளராகக் கடமையேற்ருர். அதன்பின், எம்மிடை வேர்கொண்ட நட்பு பெரு விருட்சமாயிற்று. என்னை எனது வீட்டில் வந்து சந்தித்து அளவளாவுமளவுக்கு எம் நட்பு மேலோங்கியது.

தன் கடமையிற் கண்ணுயிருந்த இவர் எவருக்காவது தீமை செய்தது கிடையாது. பதிலாக, உத்தியோகத்தர் உயர்வுக்கும் கூட்டுத்தாபன வளர்ச்சிக்கும் ஊக்கமாயுழைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மனித சமுதாயம் செம்மையுறச் சேவைசெய்வதிற் பேரின்பம் கண்ட செம்மலாவர். இதன் பயனை இவரது இறுதிச் சடங்கில் யாவரும் கண்டு பெருமிதங் கொண்டனர்.

கொழும்பிலிருந்தே கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களுமாக நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு அவர்தம் பிரிவு குறித்துப் பேரிரக்கங் கொண்டு கதறினர்.

நான் ஒரு நேர்மையான, கடமையிற் தவறாத, ஆனால், எவர்க்கும் தீமை விளைவிக்காத ஒரு நண்பனை இழந்தேன். உயிரனைய நட்புக்கு எடுத்துக்காட்டாக இருந்த எனது ஆத்ம நண்பனை இழந்து ஆறாத் துயரடைகிறேன். அவரை இனி எப்போது காண்பேனோ என்று ஏங்குகிறது என் நெஞ்சம்; ஆறாத் துயருள் அமிழ்கின்றது என் ஆன்மா.

என்ன செய்வது? உலக இயற்கை இது. எவரும் ஒருகாற் பிரிவர். இந்த உண்மையை உணர்ந்து எனது உழுவல் நண்பன் ஆத்மா இறைவனடியை நிச்சயம் அடைந்து இன்பங் காணுமென உறுதியாக நம்புகிறேன். ஒருகால் அவருடன் சேர்ந்து இன்பங்காண்பேன் என்ற உறுதி எனக்குண்டு.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்த என் உழுவல் நண்பன் ஆத்மா சாந்தியடைவதாக.

இ. இளையதம்பி
களஞ்சியப் பொறுப்பதிகாரி
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன் துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங்குணம் படைத்த பெருமகன்

நடராஜா ஐயாவே! பெரும்குணங்கள் படைத்த பெருமகனே! சான்றாண்மைக்கு வள்ளுவன் விதிவகுத்தான் என்றால் அதை நடைமுறையிற் காட்டி வாழ்ந்த ஐயனே! நண்பருக்கு நண்பனே! உற்றாருக்கு உற்றவனே! மனைவிமக்களுக்கு மாண்பு மிகுந்தவனே! சிற்றூழியர் என்றாலென்ன, சக ஊழியர் என்றாலென்ன எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கருத்து அறுகம்புல் வேர்போல் மனதில் ஆழப் பதிந்திருந்தது மட்டுமல்ல, அதை அப்பட்டமாகவும் ஆணித்தரமாகவும் அம்பலப்படுத்தத் தவறியதில்லையே! அறிஞர் அண்ணாவின் வழிவந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வார்த்தைகள் என்றும் தங்கள் நாவில் நர்த்தனம் புரிந்தன. அவைதான் தங்கள் வாழ்க்கையின் இலட்சியமாகவுமிருந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. தமிழ்தான் தங்கள் உயிர். ஆனால் பிறரையும் மதிக்கத் தவறியது கிடையாது.

